**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 154/2019**

**அ.சா : 2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **திரு. கோவிந்தன்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **ராஜமாணிக்கம்** |
| ஊர் | : | **மாதம்பதி** |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | **மரம் ஏறி** |
| மதம் | : | |
| வயது | : | 56 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 13.06.2023**

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u>:**

**நான் மாதம்பதியில் வசித்து மரம் ஏறும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தங்கை. கடந்த 2019 ஆம் வருடம் ஒரு நாள் எனது தங்கை அ.சா.1 காலை 10.00 மணியளவில் வீட்டை பூட்டி விட்டு கொடமாண்டபட்டிக்கு சென்று விட்டு மீண்டும் வீட்டிற்கு பகல் 12.00 மணியளவில் வந்த போது எனது தங்கை வீட்டின் வெளிக்கதவு உடைககப்பட்டிருந்தது என்றும், உள்ளே சென்ற போது பீரோ உடைக்கப்பட்டிருந்ததாகவும் எனது தங்கை தகவல் சொன்னார். பீரோவில் வைத்திருந்த 1 1/2 பவுன் செயின் ஒன்றம், ஒரு கம்மல் மாட்டலுடனும், கால் கொலுசு ஒரு ஜதையும், காணாமல் போனதாக சொன்னார். நான் உடனே வீட்டிற்கு சென்று பார்த்தேன். இது குறித்து எனது தங்கை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது குறித்து போலீசார் விசாரணை செய்தார்கள்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேள்விப்பட்டேன். எனது தங்கயுடன் காவல் நிலையத்திற்கு உடன் சென்றேன். போலீசார் என்னை அங்கே விசாரித்தார்கள். போலீசார் என்னிடம் சாட்சிக்காக ஒரு கையெழுத்து**

பெற்றார்கள். அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி. எண் : 154/2019**

**அ.சா : 3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **திரு. சக்திவேல்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **குள்ளப்ப மூப்பர்** |
| ஊர் | : | **மாதம்பதி** |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | **கூலி** |
| மதம் | : | |
| வயது | : | 64 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 13.06.2023**

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை:**

நான் மாதம்பதியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தம்பி மனைவி. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலையில் அ.சா.1 அவர் வீட்டை பூட்டி விட்டு பேங்க்குக்கு செல்வதாக சொல்லி சென்றார். அதன் பிறகு பகல் 12.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த போது கூச்சல் சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்த போது அ.சா.1 ன் வீட்டருகே கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்த போது அ.சா.1ன் வீட்டின் வெளிக்கதவு தாழ்ப்பாள் உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்று பார்த்த போது பீரோ உடைக்கப்பட்டிருந்ததது. பீரோவில் வைத்திருந்த நகைகள் 1 1/2 பவுன் செயின், தோடு ஜிமிக்கி, கால் கொலுசு ஆகியவை காணாமல் போனதாக அ.சா.1 சொன்னார். அ.சா.1 இது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் எனது ஊரைச் சேர்ந்த ராஜமாணிக்கம் மகன் ரமேஷ் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**அ.சா.1 எனது தம்பி மனைவி ஆவார். புகார் கொடுக்கும் போது அ.சா.1 உடன் நான் செல்லவில்லை. சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் கையொப்பம் செய்தேன்.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.**

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி. எண் : 154/2019**

**அ.சா : 4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **திரு. ராமேஷ்வரன்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **ராஜமாணிக்கம்** |
| ஊர் | : | **மேல்சங்கம்பட்டி** |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | **விவசாயம்** |
| மதம் | : | |
| வயது | : | 46 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 13.06.2023**

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை:**

**நான் மேல்சங்கம்பட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது தங்கை. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது தங்கை அ.சா.1 காலையில் அவருடைய வீட்டை பூட்டி விட்டு பேங்க் செல்வதற்காக சென்று விட்டு சுமார் 12.00 மணியளவில் வீட்டிற்கு வந்த போது வீட்டின் பூட்டை உடைத்து, பீரோ உடைத்து 1 1/2 பவுன் செயின் ஒன்றும், கம்மல் மற்றும் மாட்டல், ஒரு ஜோடி கால் கொலுசும் காணாமல் போனதாக அ.சா.1 எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். நான் அவர் வீட்டிற்கு சென்று பார்த்தேன். அவருடைய வீட்டின் கதவும், பீரோவும் உடைக்கப்பட்டிருந்தது. பிறகு இது குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். பிறகு அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து போலிசார் விசாரணை செய்தார்கள். திருடு போன இடத்தை பார்த்தார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பத்தை என்னிடம் வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**சம்பவம் குறித்து எனக்குநேரடியாக தெரியாது. புகார் கொடுக்கும் போது நானும்**

உடன் சென்றிருந்தேன். மேற்படி விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் ஒரு கையெழுத்து பெற்றார்கள். பார்வை மகஜரில் உள்ள கையெழுத்தைதான் போலீசார் என்னிடம் பெற்றார்கள். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி. எண் : 154/2019**

**அ.சா : 5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **திரு. ஸ்ரீனிவாசன்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **மோகன்** |
| ஊர் | : | **ஊத்தங்கரை** |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | **கிராம நிர்வாக அலுவலர்** |
| மதம் | : | |
| வயது | : | |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 13.06.2023**

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை:**

**நான் தற்போது வெங்கடதாம்பட்டியில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.09.2019 ஆம் தேதி நான் ஊத்தங்கரை கிராம நிர்வாக அலுவலராக ஊத்தங்கரையில் பணிபுரிந்த போது ஊத்தங்கரையில் இருந்து திருப்பத்தூர் செல்லும் சாலையில் கந்தபூசி மாரியம்மன் கோவில் அருகே ஊத்தங்கரை காவல் துறையினர் அங்கே குற்ற வழக்குளில் தொடர்புடைய ஒருவரை பிடித்து வைத்திருப்பதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் பெற இருப்பதாகவும் சாட்சியாக இருப்பதற்கு என்னை காலை 06.00 மணியளவில் எனக்கு போன் மூலமாக காவல் துறையிலிருந்து தகவல் சொன்னார்கள். நான் காலை 07.00 மணியளவில் கந்தபூசி மாரியம்மன் கோவில் அருகே இரு சக்கர வாகனத்தில் நானும், கிராம உதவியாளர் கோவிந்தராஜ் என்பவரும் ஊத்தங்கரையிலுள்ள எங்கள் அலுவலகத்திலிருந்து கிளம்பி அங்கு சென்றோம். நாங்கள் அங்கு சென்ற போது பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த சுதாகர், த.பெ. நாகராஜன் பேராம்பட்டு என்ற ஊரைச் சேர்ந்தவர் அவருடைய குற்ற விவரங்களையும், குடும்ப பின்னனியையும் எங்கள் முன்னிலையில் ஆய்வாளரிடம் தெரிவித்தார். அதில் பிப்ரவரி மாதம் 2019 ஆம் வருடம் மூன்றாவது**

வாரத்தில் கண்ணன்டஅள்ளி கிராமத்தில் இரவு 10.00 மணியளவில் இரவு ஒரு வீட்டின் பூட்டை உடைத்து தோடு, செயின் போன்ற நகைகளை கொள்ளைஅடித்ததாகவும், அதை கதவணை கிராமத்தை சேர்ந்த சித்தி சேட்டு என்பவரது வீட்டில் ஒழித்து வைத்திருப்பதாகவும் கூறினார். பின்னர் 14.06.2019 ஆம் தேதி மாதம்பதி கிராமத்தில் காலை 10.00 மணியளவில் ஒரு வீட்டின் பூட்டை உடைத்து தோடு, மாட்டல், செயின் ஆகியவற்றை கொள்ளையடித்ததாகவும், அதை தன்னுடைய வீட்டின் கூரையில் ஒழித்து வைத்திருப்பதாகவும் கூறினார். இது தொடர்பாக ஒப்புதல் வாக்குமூல ஆவணங்களை காவல் ஆய்வாளர் தயார் செய்தார். அதில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்திட்டோம். அதன் பிறகு காவல் ஆய்வாளர் போலீஸ் பார்ட்டியுடன் எங்களை அழைத்து கொண்டு காலை 08.15 மணிக்கு கோட்டாங்கல்லூர் பெருமாள் கோயில் அடிவாரம், பேரனாம்பட்டு , திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள சுதாகர் வீட்டிற்கு சென்று ஓலக்கூரையிலிருந்து 1 தோடு, 1 மாட்டல், 1 செயின் எடுத்தார்கள். அப்போது கைப்பற்றுதல் மகஜர் மூலமாக மேற்படி நகைகளை ஆய்வாளர் கைப்பற்றினார்கள். அதில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். பின்னர் அங்கிருந்து கதவணை கிராமத்திற்கு சென்று சுதாகரின் சித்தி சேட்டு வீட்டிற்கு சென்று போலீசாரும், எதிரி சுதாகரும் வீட்டுக்குள் சென்றார்கள். நான் வீட்டிற்கு வெளியே நின்றிருந்தேன். வீட்டுக்குள் சென்ற எதிரி சுதாகர் 1 தோடு, 1 மாட்டல், 1 செயின் ஆகியவற்றை எடுத்துவந்து என் முன்னிலையில் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். அங்கு வைத்து மேற்படி நகைகளை காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினார். அதற்கு சாட்சியாக நானும், கிராம உதவியாளரும் அதில் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் ஜெராக்ஸ் காபியில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4 ஆகும்.** (ஒப்புதல் வாக்குமூலமானது ஜெராக்ஸ் என்பதால் எதிரி தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனையின் பேரில் ஒப்புதல் வாக்குமூலம் குறியீடு செய்யப்பட்டது.) கோட்டாங்கல்லூரியில் உள்ள எதிரி சுதாகரின் **வீட்டிலிருந்து கைப்பற்றிய நகைகளின் கைப்பற்றுதல் மகஜரின் கார்பன் காப்பியின் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (கார்பன் காப்பியை குறியீடு செய்ய எதிரி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனையின் பேரில் கார்பன் காப்பி குறியீடு

செய்யப்பட்டது. ) போலீசார் என்னை விசாரணை செய்யதார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஒப்புதல் வாக்குமூலம் பெறும் போது நான் ஊத்தங்கரையில் பணிபுரிந்தேன். ஊத்தங்கரையில் பணிபுரிந்த போது அங்கு தான் தங்கி பணிபுரிந்தேன். கிராம நிர்வாக அலுவலகத்திற்கும், நான் தங்கியிருந்த இடத்திற்கும் சுமார் 1/2 கி.மீ தூரம் இருக்கும். கிராம உதவியாளர் கோவிந்தாராஜின் சொந்த ஊர் எக்கூர் கிராமம் ஆகும். அவர் எக்கூரில்தான் வசித்து வருகிறார். எதிரியை காவல் நிலையத்தில் பிடித்து வைத்திருந்தார்களா என்றால் பிடித்து வைக்கவில்லை. கந்தபூசி மாரியம்மன் கோவில் அருகே பிடித்து வைத்திருந்தார்கள். எதிரியை எப்போது கைது செய்தார்கள் என்றால் அதிகாலை 02.00 மணிக்கு கைது செய்ததாக காவல் நிலையத்தில் உள்ள போலீசார் எனக்கு போனில் தெரிவித்தார். காலை 06.30 மணிக்கு போன் செய்தார்கள். போன் செய்து அரை மணி நேரம் கழித்து கந்தபூசி மாரியம்மன் கோவிலுக்கு சென்றேன். நான் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த போது எனக்கு போன் வந்தது. பொதுவாக வேலை இருந்தார் காலையில் அலுவலகத்திற்கு சென்றுவிடுவேன். கிராம நிர்வாக அலுவலகத்திற்கும், கந்தபூசி மாரியம்மன் கோவிலுக்கும் இடையே சுமார் 2 1/2 கி.மீ தூரம் இருக்கும். மேற்படி கோவிலுக்கு 07.00 மணியளவில் சென்றுவிட்டேன். கோவிலுக்கு அருகில் வீடுகள் எதுவும் இல்லை. பொதுமக்கள் யாரும் இல்லை. நான் அங்கு சென்ற போது காவல் ஆய்வாளர் கே. இராமமூர்த்தி, மற்றும் சில காவலர்கள் இருந்தார்கள். பெயர் தெரியாது. எதிரி சுதாகர் இருந்தார். வேறு யாரும் இல்லை. சுமார் 5 முதல் 6 காவலர்கள் இருந்தார்கள். எதிரி 2 மணியிலிருந்து காலை 07.00 மணி வரை கோவில் அருகே இருந்தாரா என்றால் நான் செல்லும் போது அங்கிருந்தார். நான் செல்வதற்கு முன்னால் அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. கந்தபூசி கோவில் அருகே ஒப்புதல் வாக்குமூலம் எதிரி கொடுத்தார் காவல் ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்தார். அங்கு வைத்துதான் நான் கையெழுத்தும் செய்தேன். அந்த இடத்தில் வைத்து மடிக்கணிணியில் தட்டச்சு செய்தார்கள். பின்னர் பென்டிரைவவில் அதை காப்பி செய்து பிரின்ட்டை எடுத்து வந்தார்கள். பிரின்ட் எடுத்த இடத்திற்கு நான் செல்லவில்லை. பிரின்ட் எடுக்க போலீஸ் சென்றார். பெயர் தெரியாது. 1/4 மணி நேரத்தில் பிரின்ட் எடுத்து வந்துவிட்டார். எதிரியை சுமார் 10 நிமிடம் விசாரித்தார்கள். எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். சம்பவ இடத்தில்

ஊத்தங்கரை – திருப்பத்தூர் பிரதான சாலை செல்கிறது என்றால் சரிதான். கோவிலை ஒட்டி எவ்வித கிராமமும் அருகில் இல்லை. சாலையின் மேற்கு புறமாக கோயில் அமைந்திருந்தது. அருகில் இரண்டு கடைகள் உள்ளது என்று சொன்னால்ச ரியல்ல. கடை உள்ளது என்றும் வழக்கிற்காக இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோயில் அருகே பேருந்து நிறுத்தம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கோவில் அருகே பேருந்து நிறுத்தம் உள்ளது என்றும் வழக்கிற்காக மறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த பிறகு எதிரியின் வீட்டிற்கு எதிரியை அழைத்து சென்றார்கள். அங்கு காலை 08.00 மணியளவில் சென்றோம். எதிரியின் வீடு கோட்டாங்கல்லூர் பேரனாம்பட்டு திருப்பத்தூர் மாவட்டம் ஜவ்வாது மலையின் அடிவாரம் என்றால் சரிதான். மேற்படி கோயிலிருந்து எதிரியின் வீட்டிற்கு அரை மணி நேரத்திற்கு சென்றுவிடலாம். கோட்டாங்கல்லூர் கிராமத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் எதிரியின் வீடு தனியாகத்தான் உள்ளது. எதிரியின் வீடு தனியாக உள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் எதிரியின் வீட்டிற்கு அருகில் சுமார் 15 வீடுகள் உள்ளது என்றும் அதில் பொதுமக்கள் வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அங்கிருந்து பின்னர் கதணை கிராமத்திற்கு சென்றோம். அங்கு எதிரியின் சித்தியான சேட்டு என்பவரின் வீட்டிற்கு சென்றோம். கதவணை கிராமத்தில் 100 வீடுகள் இருக்கும் என்றால் இருக்கும். நாங்கள் செல்லும் போது சேட்டு வீட்டிற்கு அருகில் பொதுமக்கள் சுமார் 20–30 நபர்கள் கூடியிருந்தார்கள். அவர்களிடம் ஆய்வாளர் சாட்சி கையெழுத்து எதுவும் பெறவில்லை. அதன் பிறகு 29.09.2019 ஆம் தேதி வேறு எங்கும் செல்லவில்லை. வேறு எந்த பொருளையும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கையெழுத்து போட்டு விட்டு கிளம்பி விட்டேன். அப்போது மணி காலை 10.45 மணி இருக்கும். அதற்கு பின்னிட்டு மேற்படி தேதிக்கு பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நானும் என்னுடைய கிராம உதவியாளரும் ஒரே வாகனத்தில் ஒன்றாக சென்றோமா என்றால் தனித்தனியாக இரண்டு இரு சக்கர வாகனங்களில் சென்றோம்.

நான் கந்தபூசி கோவிலுக்கு செல்லவில்லை என்றும் அங்கு வைத்து எதிரி ஒப்புதல் வாக்குமூலம் தரவில்லை என்றும், அனைத்து ஆவணங்களும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் எதிரியிடமிருந்து சான்று

பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி வழக்கிற்காக ஜோடனை செய்யப்பட்ட ஆவணங்களில் நான் கையெழுத்து மட்டும் இட்டேன் என்றும் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முன்னிலையில் நகைகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் ஆய்வாளருடன் சென்றது பொறுத்து என்னுடைய ஆவணங்களில் தெரிய வருமா என்றால் தெரிய வராது. நான் இந்த வழக்கில்தான் சாட்சியம் அளிக்கிறேன்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 154/2019**

**அ.சா : 6**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **திரு. கோவிந்தராஜ்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **குழந்தை** |
| ஊர் | : | **ஜொல்லன்கொட்டாய்** |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | **கிராம உதவியாளர்** |
| மதம் | : | |
| வயது | : | 52 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 13.06.2023**

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u>:**

**நான் தற்போது ஜொல்லன்கொட்டாயில் வசித்து மாரம்பட்டியில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.09.2019 ஆம் தேதி ஊத்தங்கரையில் கிராம உதவியாளராக பணிபுரிந்த போது அதிகாலை 02.00 மணியளவில் போலீசார் கிராம நிர்வாக அலுவலருக்கு போன் செய்துள்ளார்கள். அப்போது சுதாகர் என்பவரை பிடித்து வைத்துள்ளதாகவும் அவரிடம் விசாரணை மேற்கொள்ள உள்ளதாகவும், சாட்சியத்திற்காக வரச்சொல்லி உள்ளதாகவும் கிராம நிர்வாக அலுவலர் எனக்கு காலை 02.10 மணிக்கு போன் செய்தார். நான் எனது வீட்டில் இருந்து காலை 03.00 மணியளவில் கந்தபூசி மாரியம்மன் கோவில் அருகே வந்துவிட்டேன். நான் அங்கு சென்ற போது கந்தபூசி மாரியம்மன் கோவில் அருகே போலீசாரும், கிராம நிர்வாக அலுவலரும் இருந்தார்கள். காலை 03.10 மணியளவில் போலீசார் சுதாகரிடம் விசாரணை செய்தார்கள். அவர் நகையை கண்ணன்டஅள்ளி கிராமத்தில உள்ள ஒரு வீட்டில் திருடியதாக தெரிவித்தார். என்ன நகை திருடினார் என்று அவர் சொன்னார் ஆனால் தற்போது தெரியவில்லை. வேறு எங்கு திருடியதாக கூறினார் என்று எனக்கு சரியாக நினைவில் இல்லை. ஊத்தங்கரை காவல்**

நிலையத்தில் வைத்து கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள். கிராம நிர்வாக அலுவலர் ஊத்தங்கரை காவல் நிலையத்தில் வைத்து கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து செய்தார். நானும் உடன் கையெழுத்து செய்தேன். நகையை எங்கு வைத்து கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் ஜெராக்ஸ் நகலில் உள்ள இரண்டாவது கையெழுத்தும், கைப்பற்றுதல் மகஜர் கார்பன் காபியில் உள்ள இரண்டாவது கையெழுத்தும் என்னுடையது ஆகும். மேற்படி இரண்டு கையெழுத்துகளையும் ஊத்தங்கரை காவல் நிலையத்தில்வைத்து நான் போட்டேன். மேற்படி கையெழுத்துகளை சுதாகர் நகையை திருடியது சம்மந்தமாக கையெழுத்து போட்டேன். (**கைப்பற்றுதல் மகஜரின் கார்பன் காப்பியில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. )**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரியை போலீசார் விசாரித்த போது மாதம்பதி கிராமத்தில் ஒரு வீட்டில் பூட்டை உடைத்து திருடியதாக சொன்னாரா என்றால் சொன்னார். திருடிய நகையை போலீசார் எதிரியின் வீட்டிற்கு சென்று என் முன்னிலையில் கைப்பற்றியதற்காகத்தான் சாட்சியாக கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.